## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.
## O.S.No.150/2018

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23– ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 23.09.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமேஸ்வரி | ஜாதி | : | |
| க /பெயர் | : | புலவேந்திரன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எந்த புல எண்ணில் வாய்க்கால் இருக்கிறது என்றால் 457/7 மற்றும் 457/8 உள்ளது. மேற்கண்ட வாய்க்கால் யாருக்கு சொந்தமானது பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் எத்தனை வருடங்களாக வாய்க்கால் அவர்களது பயன்பாட்டில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாய்க்காலிலி வரக்கூடிய தண்ணீரை எனது வாய்க்கால் பாசனத்திற்கும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரிதான்.

2. புல எண்457/10 மற்றும் 457/9 கூட்டு பட்டா என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை கடந்த 2011 ஆம் வருடம் கிரையம் பெற்றேன். நான் கிரையம் வாங்கும் போது அந்த இடத்தில் வாய்க்கால் கிடையாது. நான் கிரையம் பெற்ற சொத்திற்குரிய ஆவணத்தில் 2 மற்றும் 3 அயிட்ட சொத்தில் கூட்டு பட்டா எண்.1179 மற்றும் 943 என கண்டுள்ளது என்றால் சரிதான்.

3. நான் கிரையம் பெற்ற சொத்தின் புல எண்.457/9 மற்றும் 457/10 கூட்டு பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு பாசன வாய்க்கால் இருந்ததை நான் தூர்த்து அந்த இடத்தையும் சேர்த்து அபகரிக்க வேண்டிய பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த பிரதிவாதிகள் மீதிருந்த காழ்புணர்ச்சியின் காரணமாக அவர்களை மட்டும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

( வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.18 16:40:49 +0530

District Munsif
Mannargudi.